**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண்.57/2019</u>**

இந்நீதிமன்றத்து பென்ஞ் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமுலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 30.06.2025**

**பெயர் – பத்மநாபன்**

**த/பெ – சுப்புராமநாயுடு**

**சாட்சி – PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்– 3.15 பி.எம்.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

1. பத்மாவதியம்மாளிடமிருந்து நான் வாங்கியதாக கூறும் சொத்தின் நீள மற்றும் அகலம் என்னவென்றால் தெரியவில்லை. பழநி, ஹாஜா முகம்மது, சுப்பிரமணி மூவரும் சேர்ந்து பொன்னேரி சார்பு நீதிமனற்த்தில் அசல் வழக்கு எண் 138/2018 என் மகனுக்கு எதிராகவும் எனக்கும் தொடுத்த வழக்கு என்றால் ஆம். இவ்வழக்கு பழநி மீது மட்டும் தான் வழக்கு தொடுக்கப்பட்டது என்றும் ஹாஜா மற்றும் சுப்பிரமணி மீது வழக்கு தொடுக்கவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 138/2018 என்ற வழக்கில் எனது மகன் ஆஜர் ஆகி பதிலுரை தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

2. அந்த வழக்கின் விவரம் தெரிந்து தான் அவர் பதிலுரை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். 3 கடைகளும் தெற்கிலிருந்து வரிசையாக வடக்கு வரையில் பழநி, சுப்பிரமணி, மற்றும் ஹாஜா கடைகள் என்ற வரிசையில் இருந்தது என்றால் ஆம். பழநி கடை 13 அடி அகலம், 40 அல்லது 50 அடி நீளம் இருக்குமா என்றால் 12 அடிக்கு 40 அடி அளவு கொண்டதாகும். தென்வடக்காக 12 அடி இருக்கும் என்றும் கிழக்கு மேற்காக 40 அடி இருக்குமா என்றால் இருக்கிறது. பழநி கடைக்கு பின்புறம் கிழக்கு பக்கமாக சோழவரம் பஞ்சாய்த்து அலுவலகத்திற்கு 20 அடி இடையே 150 அடி இடைவெளி உள்ளது என்றால் சரிதான்.

3. பழநி கடைக்கு வடக்கே உள்ள சுப்பிரமணி கடை 20 அடிக்கு 30 அடி என்றால் தெரியாது. ஹாஜா கடையின் அளவும் 20 அடிக்கு 30 அடி என்றால் தெரியாது. சுப்பிரமணி மற்றும் ஹாஜா கடைகள் சுமார் எவ்வளவு விஸ்தீரனம் இருக்கும் என்றால் இருகடைகளும் சேர்ந்து 2 ½ செண்ட் இருக்கும். மேற்சொன்ன இரு கடைகளும் சோழவரம் பஞ்சாயத்து அலுவலகத்திற்கும் சுமார் 150 அடி இடைவெளி இருக்கும் எ'னறால் சரிதான். பழநி கடையின் தெற்கு பக்கம் ரோடு புறம்போக்கு காலி இடம் என்றால் காலி இடம் தான், புறம் போக்கு நிலம் அல்ல பட்டா நிலம் தான்.

4. பழநி கடைக்கு தெற்குப்புறம் எத்தனை செண்ட் என்னுடைய நிலம் என்றால் எனக்கு நினைவில் இல்லை. தோராயமாக எவ்வளவு நீளம் மற்றும் அகலம் இருக்கும் என்றால் அந்த இடம் கிழக்கு மேறகாக 150 அடியும் வடக்கு தெற்காக 150 அடி இருக்கும். இந்த வழக்கில் பத்மாவதி அம்மாவிடமிருந்து வாங்கியதாக சொன்ன இடமா என்றால ஆம். பத்மாவதி அம்மாவிடம் எத்தனை செண்ட் நிலம் வாங்கினேன் என்றால் 19 செண்ட் வாங்கினேன். 19 செண்ட் வாங்கியதாக வழக்கிலும் குறிப்பிடவில்லை அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. ஹாஜா கடையின் வடக்கே காலி இடம் உள்ளது என்றும் அதுவும் புறம்போக்கு நிலம் என்றால் தவறு, பட்டா நிலம் ஆகும். மேற்சொன்ன இடம் யாருடைய பட்டா நிலம் என்றால் பத்மாவதி அவர்களின் பட்டா நிலம் ஆகும். இந்த வழக்கில் பழநி, சுப்பிரமணி, ஹாஜா மூவரின் கடையிருக்கும் இடத்திற்கும் நான் பத்மாவதியம்மாளிடம் இருந்து வாங்கியதாக கூறும் நிலத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் அவர் பதிலுரை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பழநி மீதும் மட்டும் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது, சுப்பிரமணி மற்றும் ஹாஜா மீது வழக்கு தொடுக்கவில்லை அது என்னிடம் இல்லையா என்றால் அதுவும் எங்கள் நிலம் தான். ஏன் சுப்பிரமணி மற்றும் ஹாஜா மீது காலி செய்ய கோரி வழக்குத் தொடுக்கவில்லை என்றால் முதலில் பழநியைத்தான் காலி செய்ய வேண்டும் பின்பு அவர்கள் இருவர் மீதும் நடவடிக்கை எடுப்போம்.

6. நில அளவையர் கொண்டு அளந்தோமானால் என் மகனுக்கு சொந்தமான சொத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளாரா என்று தெரியவரும் என்றால் சரிதான். நான் இதுவரை நீதிமன்றத்தில் அந்த நிலத்தை அளப்பதற்கு நிளஅளவையர் வைக்ககோரி இந்நீதிமன்றத்தின் வாயிலாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் பெற்றதாக கூறும் சொத்தில் பழநி , சுப்பிரமணி, ஹாஜா குடியிருக்கவில்லை என்றும் நிலஅளவயைர் கொண்டு அளக்கும் பட்சத்தில் அந்த விவரம் தெரியவரும் என்ற காரணத்தினால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 437/2 பி –ல் 2 ½ செண்ட் என்றால் சரிதான்.

7. சர்வே எண் 437/2 பி –ல் 2 ½ செண்ட் மட்டும் தான் இருக்கிறது என்றும் பழநி 2 ½ செண்ட் மற்றும் சுப்பிரமணி மற்றும் ஹாஜா இருவருக்கும் சேர்ந்து 2 ½ செண்ட் வரும்பட்சத்தில் மொத்தமாகவே 5 செண்ட் வருகிறது, எனவே பொய் வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று கூறினால் எனது மகனுக்கு மொத்தமாக 19 செண்ட் உள்ளது. பழநி , சுப்பிரமணி மற்றும் ஹாஜா மூவரும் எனக்கு கீழ் வாடகைதாரர்களாக எப்போதும் இருந்ததில்லை என்றும் வாடகை ஒப்பந்தம் எதுவும் போடவில்லை என்றும் கூறினால் ரூ. 20 முத்திரைத்தாளில் வாடகை ஒப்பந்தம் போடப்பட்டு உள்ளது. ரூ. 15000 முன்பணமாகவும், ரூ. 2300 மாத வாடகயைாகவும் 1 மாதம் அளித்தனர். அதற்கு பின்பு அஞ்சலகம் வாயிலாக பணவிடை அனுப்பினர். எனது மகன் ஊரில் இல்லாத காரணத்தில் கையொப்பம் போட இயலாமல் மேற்சொன்ன பணவிடை திருப்பி அனுப்பப்பட்டது.

8. மேற்கூறிய சங்கதிகள் போல் எதுவும் நடைபெறவில்லை என்றும் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் கூறினால் சரியல்ல. பழநி , சுப்பிரமணி, ஹாஜா மூவரும் கடை வைத்துள்ள இடம் புறம்போக்கு இடம் என்றும் அதற்கு அரசுதான் உரிமைதாரர் என்றும் எனக்கு வாடகை ஒப்பந்தம் போட உரிமை இல்லை என்றும் கூறினால் சரியல்ல. அது எங்களுடைய இடம் தான். மேற்சொன்ன நிலம் புறம்போக்கு

நிலமாக இருந்தால் அதில் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தவோ, காலி செய்ய கேட்கவோ, வாடகை பெறுவதற்கோ எனக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். பிரதிவாதி சாலை புறம்போக்கில் தான் கடை கட்டி அனுபவித்து வருகிறார் என்றும் நான் வேறு ஒரு இடத்தில் நிலம் வாங்கி அதை சாதகமாக கொண்டு பிரதிவாதிக்கு சொந்தமான கடையை காலி செய்ய முற்படுகிறேன் என்றும் அதனால் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டிய வழக்கு என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 4.05 பி.எம்.**